## 29.33 விசைப்பம்பு / மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு பல்முனை தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 120 நாள் : 10.05.2000

படிக்க :

1. அரசாணை (2டி) எண்.149, ஊரக வளர்ச்சி நாள்– 09.07.1999
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.27094/ஈ1/99, நாள்– 06.04.2000.
3. அரசாணை (நிலை) எண்.119, ஊரக வளர்ச்சி நாள்– 10.05.2000

**ஆணை**

கிராம ஊராட்சிப் பணியாளர்களுக்கு அவ்வப்போது ஊதியம் உயர்த்தி நிர்ணயித்து வந்த போதிலும், மேலும் ஊதிய உயர்வு மற்றும் சலுகைகள் கோரிய நிலையில், அவர்கள் கூடுதல் ஊதியம் பெறும் வகையிலும், அவர்களின் செயல்பாடு மேம்படும் வகையிலும், கிராம ஊராட்சிகளின் நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு பணியமைப்பை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி இயக்குநர் தலைமையில் சில அலுவலர்களையும் கிராம ஊராட்சி தலைவர்களையும் உறுப்பினர்களாக கொண்டு குழு ஒன்று ஏற்படுத்தி படிக்கப்பட்டவை 2ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2) மேற்குறிப்பிட்ட குழு அரசுக்கு அளித்துள்ள அறிக்கையில், தற்பொழுது கிராம ஊராட்சி பகுதி நேர விசைப்பம்பு / மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் எந்த வித அடிப்படை தொழில் நுட்ப பயிற்சியும் பெறாதவர்களாக உள்ளனர் என்றும், அதனால் தவிர்க்கப்பட வேண்டிய சில பழுதுகள் கூட பெரும் செலவினங்களுக்கு காரணமாகி விடுவதுடன் சிறிய பழுதுகளுக்குகூட தொழில் நுட்ப உதவியை நாட வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டு கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது.

**பரிந்துரை எண். 2**

எனவே ஊராட்சிகளில் பணியாற்றும் விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு அடிப்படை மின்சாரம் /தொலைக்காட்சி சம்பந்தமான தொழில் நுட்ப பயிற்சியை ஊரக வளர்ச்சி துறையை சார்ந்த ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கவும் அரசு ஆணையிடலாம் என இக்குழு பரிந்துரை செய்கிறது.

3) மேற்கண்ட பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. கிராம ஊராட்சி பகுதி நேர விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பல முனை தொழில் நுட்ப பயிற்சி அளிப்பது, கிராம குடிநீர் வழங்கல் மேம்பாடு அடையவும், ஒரே பணியாள் பல்வேறு பணிகளை செய்து கணிசமான ஊதியம் பெறவும் வழிகோலும் என்பதால் குழுவின் பரிந்துரையை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது.

4) எனவே கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் பகுதி நேர விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு, அடிப்படை மின்சாரம், தொலைக்காட்சி பெட்டி சம்பந்தமான தொழில் நுட்ப பயிற்சியை ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுகின்றது. பயிற்சி திட்டம், பயிற்சி கால அளவு, பயிற்சி அளிக்கப்பட வேண்டியவர்கள் பட்டியல் போன்றவற்றை ஊரக வளர்ச்சி இயக்குநர் நிர்ணயிக்கவும், பயிற்சி செயல்பாட்டினை அவர் கண்காணிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

5. இந்த அரசு ஆணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சி தலைவர்களுக்கும், உதவி இயக்குநர்களுக்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் உடனடியாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6.இந்த அரசாணை நிதித் துறையின் அரசாணை எண். 1370/எப்எஸ்/பி/2000, நாள்:–.03.05.2000 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்